**தேசிய இளைஞர் படையணி – 2017**

-----------------------------------------------------------------------

தேசிய இளைஞர் படையணியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2002 இன் 21 ஆம் இலக்க தேசிய இளைஞர் படையணி அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் படையணியின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று படையணியின் தலைவருக்கு 2019 சனவரி 07 ஆம் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் படையணியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி படையணியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினது 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தைத் தவிர, 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய இளைஞர் பதவியணியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01**

நியமத்தின் 69 ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கையிடப்பட்ட திகதியின் பின்னர் நியாயமான காலப்பகுதியொன்றில் அவை பரிசீலனையாளர்களிற்கு வழங்கப்படாதிருக்குமாயின் நிதிக்கூற்றுக்களில் பயன்படுத்தும் தன்மை பாதிப்பிற்கு உள்ளாகும். அதன் பின்னர் நிறுவனத்திற்கு அறிக்கையிடல் திகதியிலிருந்து 06 மாதகாலத்தில் அந்த நிதிக்கூற்றுக்களை விநியோகிக்கும் இயலுமை காணப்பட வேண்டியிருந்த போதிலும், தேசிய இளைஞர் படையணியின் 2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 நவம்பர் 26 ஆந் திகதியே விநியோகிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

(i) நியமத்தின் 24 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றாக, இனங்காண்பதற்கு தகைமை பெறுகின்ற ஆதனம், பொறிகள் மற்றும் உபகரண விடயம் அதன் கிரயத்திற்கு அளவிட வேண்டியிருந்த போதிலும், ரூபா 358,906 தொகையான தாமதக் கட்டணம் கழிக்கப்பட்டு கணனி உபகரணங்கள் மற்றும் தளபாட உபகரண இருப்பொன்று கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 69 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்தொன்றாக பயன்படுத்துவதற்கு தயார் நிலைக்கு கொண்டு வந்ததன் பின்னரே பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்பட வேண்டும். எனினும், அதற்கு இணங்காத வகையில் மீளாய்வாண்டின் இறுதிக் காலாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 74,424,177 பெறுமதியான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியைக் கவனத்தில் கொள்ளாமல் முழு வருடத்திற்கும் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத்தேய்வு ரூபா 13,902,711 தொகை அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

படையணியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இருப்புக் கிரயம் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமதியில் குறைந்த பெறுமதி கணக்கு வைக்க வேண்டியமை கணக்கீட்டுக் கொள்கையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் நிதிக்கூற்றுக்கள் இருப்பின் கீழ் பிரியாவிடை சீருடைகளின் கிரயப் பெறுமதியான ரூபா 70,842,753 தொகை காண்பிக்கப்பட்டிருந்தும் இந்த சீருடைகள் ஆண்டிற்கு இரு தடவை பயன்படுத்தி களஞ்சியத்திற்கு கையளிக்கப்படுகின்ற பிரியாவிடை செல்லும் செயற்பாடுகளுக்காக மாத்திரம் பயன்படுத்தப்படுகின்ற சீருடையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இந்த இருப்பின் தேறிய தேறக்கூடிய பெறுமதி இனங்காணப்படாமையின் காரணமாக அந்த இருப்பின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்குரிய றேஞ்சர் படி ரூபா 1,201,350 தொகை மீளாய்வாண்டின் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் றேஞ்சர் படி ரூபா 404,100 தொகை மற்றும் உணவுப் படி ரூபா 370,425 தொகை என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) படையணித் தளத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலை கட்டிடம் 2017 செப்தெம்பர் 20 ஆந் திகதி முதல் 2018 ஆகஸ்ட் 17 ஆந் திகதி வரையான காலப்பகுதியின் போது மாதாந்த வாடகை ரூபா 35,555 தொகையில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த வாடகை வருமானம் கணக்கு வைக்கப்படாமல் படையணியின் நலன்புரிச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

(இ) 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 270,228 தொகை மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) கணக்கீட்டு முறைமையில் இனங்காணப்படாத பிழையாக 4 சந்தர்ப்பங்களின் போது ரூபா 122,056 கூட்டுத்தொகையானது வைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த தவறு இனங்கணாப்பட்டு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அட்டுறு செலவினமாக ரூபா 53,400 தொகை இரு தடவை கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது பெறப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான செலவினங்களை உறுதிப்படுத்தும் எழுத்துமூல சான்றுகள் இன்றி ரூபா 1,672,945 தொகை அட்டுறு செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.5 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்களை, கணக்காய்விற்குச் சமர்ப்பிர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளுடன் ஒப்பீடு செய்த போது இரண்டு கணக்கு விடயங்களுக்குரியதாக கூட்டுமொத்தமாக ரூபா 5,355,053 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

| விபரம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | பட்டோலைகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| உணவுப் படிகள் | 193,325,925 | 188,293,768 | 5,032,157 |
| இயலளவு அபிவிருத்தி | 7,559,043 | 7,881,939 | 322,896 |
| | | | 5,355,053 |

### 2.3 பெற வேண்டிய கணக்குகள்

மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்களுக்காக வெளி நிறுவனத்திலிருந்து மீளாய்வாண்டிற்காக அறவிட வேண்டிய ரூபா 2,393,538 தொகையும், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 4,362,278 தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 6,755,816 தொகை 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2002 இன் 21 ஆம் இலக்க இளைஞர் படையணி அதிகாரச்சட்டம் | |
| (i) 1 ஆம் பிரிவு | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிறுவனம் ‘‘இளைஞர் படையணி’’ ஆக பெயரிடப்பட்ட போதும், நிதிக்கூற்றுக்களில் தேசிய இளைஞர் படையணியாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. |
| (ii) 2(4) ஆம் பிரிவு | இளைஞர் படையணி சபையின் நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்காக அவசியமாக இருக்க வேண்டிய தொழில்சார் பயிற்சிகள், இளைஞர் அபிவிருத்தி மற்றும் கூட்டமைத்தல் போன்ற பணிகளுக்காக மூன்று குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 19 ஆம் பிரிவு | சேர்க்கப்பட வேண்டிய பயிலுனர்களின் வயது பதினெட்டு வருடங்களுக்கு குறையாமலும், இருபத்தெட்டு வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டிய போதிலும், பதினெட்டு வயதிற்குக் குறைவானவர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | நிதிப்பிரமாணம் 571 | 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் வருமானத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டு முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 215,066 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) 6.5.1 ஆம் பிரிவு | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வரைவு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 9.5.1 ஆம் பிரிவு | பதவியணியினர் பயிற்சிக்காக பாதீடொன்று தயாரிக்கப்பட்டு அதற்காக வள ஒதுக்கீடுகள் வழங்கப்பட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், படையணியால் பயிற்சி நடவடிக்கைகளுக்காக பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக படையணியின் நிதி விளைவுகள் ரூபா 68,469,997 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 44,601,282 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 113,071,279 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 187,681,721 இனால் அதிகரித்திருந்த போதிலும், செலவினம் ரூபா 300,753,000 இனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட நிதிவிளைவின் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 02 ஆண்டுகளினதும் நிறுவனத்தின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 11,053,605 தொகையான பற்றாக்குறையும் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 44,601,282 மிகையொன்றும் ஏற்பட்டிருந்ததுடன் மீண்டும் மீளாய்வாண்டின் போது ரூபா 68,469,997 பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. எனினும், நிதி விளைவுகளில் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீளச் சீராக்கும் போது 2015 ஆம் ஆண்டில் ரூபா 275,073 தொகையான படையணியின் பங்களிப்பு 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 415,732,341 தொகை வரை அதிகரித்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 409,920,173 வரை குறைவடைந்திருந்தது.

## 3.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

முன்னைய ஆண்டின் நடைமுறை மற்றும் விரைவு விகிதம் முறையே 1.57 மற்றும் 1.03 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் முறையே 6.58 மற்றும் 5.40 விகிதம் வரை உயர்வடைந்திருந்தது. பெறவேண்டிய முற்பணம் 152 சதவீதத்தால் உயர்வடைந்து சென்றமை, நடைமுறை விகிதம் உயர்வடைந்து சென்றமைக்கு பிரதான காரணமாக இருந்ததுடன் அந்த முற்பணத்தில் ஒப்பந்தத்திற்காக வழங்கப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பணம் ரூபா 480,929,665 அதாவது மொத்த நடைமுறைச் சொத்துக்களில் 74 சதவீதம் உள்ளடங்கியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

படையணியால் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களை உள்ளடக்கி அத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்படுநிலையும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 23 பிரதான செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 27 பிரதான செயற்பாடுகளுக்குரிய செயல்முன்னேற்றம் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் ரூபா 2.24 மில்லியன் செலவில் திட்டமிடப்படாத 4 செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும் திட்டமிடப்பட்டிருந்த பாதீட்டு நிதி ஏற்பாடு ரூபா 2.28 மில்லியன் தொகையான 05 செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்குப் புறம்பாகவும் மற்றும் பாதீட்டு நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாதிருந்த ரூபா 2.72 மில்லியன் தொகையான 3 செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) 2002 இன் 21 ஆம் இலக்க தேசிய இளைஞர் படையணி அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் படையணியின் நோக்கமாக, அபிவிருத்தி, தொழில்பயிற்சி மற்றும் தொழில்சார் அபிவிருத்தி என்பனவாகும். அந்த நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) முன்னைய ஆண்டின் போது படையணியால் பாடநெறி நடாத்தப்பட்ட முதலாவது குழுவிற்காக சனவரி முதல் யூன் வரையும், இரண்டாவது குழுவிற்காக யூன் முதல் திசெம்பர் வரையும் நடாத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது முதலாவது குழு 2017 சனவரி முதல் யூன் வரையும் இரண்டாவது குழு 2017 செப்தெம்பர் முதல் 2018 பெப்ரவரி வரையான காலத்தின் போதும், காணப்பட்ட நல்லாளுகை அபிவிருத்தியொன்று வழங்கப்பட்டிருந்தது. எனினும், பாடநெறி காலஎல்லையை மாற்றுவதற்கான முறையான எழுத்துமூல அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது 49 நிலையங்களுக்காக இரண்டு குழுக்களுக்கு 13,811 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன், அதில் 4,167 மாணவர்கள் பாடநெறிகளை கைவிட்டுச் சென்றிருந்தனர். அதன் பிரகாரம் பாடநெறிகளை பூர்த்தி செய்தவர்களின் எண்ணிக்கை 9,644 ஆக இருந்ததுடன் அது சேர்க்கப்பட்ட பயிலுனர்களில் 70 சதவீத அளவில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) தேசிய தொழிற் தகைமை சான்றிதழுக்கான திறன் பரிசோதனை (NVQ) நடாத்துவதற்காக ரூபா 2,829,467 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது முதலாவது குழுவின் 34 நிலையங்களை மதிப்பீடு செய்வதற்காக 5,205 பயிலுனர்கள் தோற்றியிருந்ததுடன் அதில் 4,866 பேர் மதிப்பீட்டில் சித்தி அடைந்திருந்ததுடன் 4,604 பேர்களுக்கு மாத்திரம் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. இரண்டாவது குழுவிற்காக Building Career Skills விடய சிபாரிசின் கீழ் 33 நிலையங்களில் 1,818 பயிலுனர்கள் மதிப்பீட்டிற்காக தோற்றியிருந்ததுடன் அதில் 1,601 பேர் மதிப்பீட்டில் சித்தியடைந்திருந்ததுடன் 574 பேர்களுக்கு மாத்திரம் சான்றிதழ் உரித்தாக்கியிருந்தது.

(iv) மீளாய்வாண்டின் போது படையணியினால் ரூபா 11,126,000 செலவில் 5,405 மாணவர்கள் தொழில்பயிற்சிகளுக்காக அனுப்பப்பட்டிருந்த போதிலும் 1,642 மாணவர்கள் பயிற்சியை விட்டுச் சென்றிருந்தனர். எனினும். இந்த தொழில்பயிற்சியை பூர்த்தி செய்தல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் முறைமையொன்று காணப்பட்ட போதிலும் பயிற்சியை பூர்த்தி செய்த பயிலுனர்களை சரியாக அதிலிருந்து இனங்காண முடியாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(v) மீளாய்வாண்டின் போது செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட பயிற்சி நிலையமான நாவுல நிலையத்தின் (ABT Center) இரண்டு குழுக்களுக்குரிய 7,166 பயிலுனர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 10,791,884 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும், வெளித்தரப்பினருக்குரிய 609 நபர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 814,984 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,293,289 தொகையான வருமானமொன்று பெறப்பட்டிருந்தது. எனினும், இந்த வெளித்தரப்பினர்களுக்கு பயிற்சி வழங்குதல் மற்றும் பணத்தை அறவிடல் என்பவற்றுக்கான எழுத்து மூல அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஏனைய நிறுவனங்களுக்குரிய ரூபா 35,667,765 பெறுமதியான 10 வாகனங்கள் படையணியால் பயன்படுத்தப்பட்டிருந்த போதும் இந்த மோட்டார் வாகனங்களின் சட்டரீதியான உரித்தை கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட மோட்டார் வாகனங்களின் பெறுமதியில் 2015 ஆம் ஆண்டு முதல் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட ரூபா 2,000,000 தொகையான 02 மோட்டார் வாகனங்கள் மற்றும் 2017 ஆம் ஆண்டின் போது ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட ரூபா 1,000,000 பெறுமதியான மோட்டார் வாகனமொன்று என்பன அவதானிக்கப்பட்டதுடன் அந்த மோட்டார் வாகனங்களைவ விற்றுத்தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

சீன அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் 03 சீனமொழி கல்லூரிகள் தம்புள்ள, காலி மற்றும் திக்வெல்ல இளைஞர் படையணி நிலையங்களில் ஸ்தாபிப்பதற்காக ரூபா 13 மில்லியன் தொகை 2016 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்தப் பணிகளை நிறைவேற்றாமல் பணம் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புதிய நிலையத்திற்கு 2016 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 50,997,436 தொகையான 175 கணனிகள் மற்றும் 4,150 விரிவுரை மண்டப கதிரைகள் என்பவற்றை உள்ளடக்கிய 09 விடய வகைகளுக்குரிய பொருட்கள் 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் 18 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக களஞ்சியங்களில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் புதிய நிலையத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 54,474,893 தொகையான 25 முச்சக்கர வண்டிகள், 4,875 விரிவுரை மண்டபக் கதிரைகள் என்பவற்றை உள்ளடக்கிய 07 விடய வகைகளுக்குரிய பொருட்கள் பத்து மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக றத்மலான களஞ்சியத்திலும், ரூபா 49,504,500 தொகையான கணனிகள் மற்றும் 475 UPS இயந்திரங்கள் கந்தளாய் பயிற்சி நிலையத்திலும், கூட்டுப் பெறுமதி ரூபா 4,569,519 தொகையான 20 விடய வகைகளுக்குரிய பொருட்கள் யக்கல பிரதான களஞ்சியத்திலும் விளைவற்றுக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

**4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

12 புதிய நிலையங்களை ஆரம்பிப்பதற்குத் தேவையான மற்றும் அவசர நடவடிக்கைகளாகக் கருதி பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த நிலையங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக களஞ்சிய வாடகை ரூபா 2,028,200 தொகையும், காப்புறுதிக் கட்டணம் ரூபா 149,724 தொகை மற்றும் பாதுகாப்புச் சேவைக் கட்டணம் ரூபா 338,817 தொகை அதாவது ரூபா 2,516,741 மேலதிகச் செலவினமொன்று செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**4.6 இனங்காணப்பட்ட நட்டம்**

மீளாய்வாண்டின் போது ரூபா 5,380,158 கிரயமான நிலையான சொத்துக்களின் இருப்பொன்று ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டமையால் ரூபா 3,225,966 நட்டமொன்று படையணிக்கு ஏற்பட்டிருந்தது. ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் கிரயத்தை உறுதிப்படுத்துவதற்காக விரிவான பட்டோலையொன்று (அகற்றப்பட்ட சொத்துக்களின் கொள்வனவுத் திகதி, கிரயம் போன்ற) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் ஒவ்வொரு நிலையங்களுக்கும் உரிய சொத்துக்கள் தொகுதியாக மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 4.7 முறையாகக் கையேற்கப்படாத காணிகள் / ஆதனங்களில் செயற்திட்டத்தை ஆரம்பித்தல்

படையணியால் பயன்படுத்தப்படுகின்ற காணிகளின் சட்டரீதியான உரித்து கையேற்கப்படாதிருந்ததுடன் சட்டரீதியான உரித்து காணப்படாத போது காணி / ஆதனங்களில் மீளாய்வாண்டின் போது கட்டிட நிர்மாணத்திற்காக ரூபா 121,269,140 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 4.8 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு படையணியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 1039 ஆகவும், உள்ளபடியான பதவியணியினர் 852 ஆகவும் இருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பதவியணியில் 118 பேரையும், ஒப்பந்த பதவியணியில் 68 பேரையும் உள்ளடக்கி 186 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் படையணியின் பதவிவியணியின் பிரமான பதவியான ''பணிப்பாளர்'' பதவி நிரந்தர பதவியொன்றாக இருந்த போதிலும், நிரந்தர பதவியொன்றை வழங்காமல் தொடர்ச்சியாக இரண்டாம் நிலை அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2017 ஆம் ஆண்டின் போது 73 நிரந்தர பதவியணியினரை உள்ளடக்கி நிறுவனத்தின் 124 ஊழியர்கள் சேவையைக் கைவிட்டுச் சென்றிருந்தனர். இவ்வாறு வேலையை கைவிட்டுச் செல்லும் போக்கு உயர்மட்டத்தில் காணப்பட்டமை, நிறுவனத்திற்கு பயிற்சி பெற்ற ஊழியத்தை இழந்தமையால் நிறுவனத்தின் வினைத்திறனுக்கும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 இன் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2018 நவம்பர் 26 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5.2 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம், மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வுக் குழு நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ஒரு குழுக் கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

## 5.3 பெறுகை மற்றும் ஒப்பந்த செயற்பாடுகள்

### 5.3.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.2 ஆம் பந்தி மற்றும் பெறுகைகள் செயல்வழிக் கோவையின் 4.2.3 ஆம் பந்தி என்பவற்றின் பிரகாரம் பெறுகை கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புதிய பயிற்சி நிலையத்திற்குத் தேவையான உபகரணங்களை வழங்குவதற்கு 12 தொகுதிகளின் கீழ் 62 விடய வகைகளை வழங்குவதற்காக 2017 செப்தெம்பர் 15 ஆந் திகதி செய்திப் பத்திரிகை அறிவித்தல் மூலம் கேள்வி கோரப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் கணனி, அலுவலக உபகரணங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலை உபகரணங்களை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 79,031,360 தொகையான பெறுகை நடவடிக்கைகளின் போது பெறுகை செயல்வழிக்கோவை மற்றும் பெறுகை வழிகாட்டிக் கோவை என்பவற்றுக்கு இணங்காதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பெறுகை செயல்வழிக்கோவையின் 2.7.5 ஆம் பந்தியின் பிரகாரம் பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு என்பவற்றை நியமித்தல் தொடர்பாக கோரும் போது உரிய மாதிரிகள் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் அந்தக் குழுக்களுக்காக அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.6.1(ii) ஆம் பந்தியின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் பொறுப்புக்கள் மற்றும் பணிப்பொறுப்புக்களுடான மாதிரித் தன்மை உருவாக்கப்பட்டமைக்கும், சமமான மட்டத்தில் போட்டியாக இருந்தமை மேம்படுத்தப்பட்டமையும் உறுதிப்படுத்தும் வகையில் மாதிரிகளை மீளாய்வு செய்தல் மற்றும் அங்கீகரித்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் தேசிய போட்டியாளர் கேள்வி கோருவதற்காக ஆகக் குறைந்தது 21 நாட்கள் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், செய்திப் பத்திரிகை அறிவித்தலின் பிரகாரம் கேள்வி சமர்ப்பிப்பதற்காக 15 நாட்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன.

(இ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.12 ஆம் பந்தியின் பிரகாரம் பெறுமதி சேர் வரியை மேவுகை செய்வதற்காக (வற் வரி) பணம் செலுத்தியதன் பின்னர் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் அந்த செலுத்துதல்கள் தொடர்பான விபரங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் பிரதியொன்றுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கும் அறிவிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3.2 தாமதமான செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 126 நிர்மாணங்களுக்குரிய ரூபா 3,600,864,172 பெறுமதியான ஒப்பந்தங்கள், 16 தனியார் நிறுவனங்களுக்கும், தேசிய இயந்திர உபகரணங்கள் நிறுவனத்திற்கும் கையளிக்கப்பட்டிருந்தன. அதனிடையே தேசிய இயந்திர உபகரண நிதியத்திற்கு 2016 ஆம் ஆண்டின் போதும், 2017 ஆம் ஆண்டின் போதும் கையளிக்கப்பட்டிருந்த முறையே 41 மற்றும் 31 ஆன ரூபா 1,241,581,512 பெறுமதியான 72 நிர்மாண ஒப்பந்தங்களின் ஒப்பந்தக் காலம் 91 நாட்களாக இருக்க வேண்டியிருந்த போதிலும், 10 சந்தர்ப்பங்களின் போது அந்த ஒப்பந்த காலத்தை நீடித்தல் இடம்பெற்றிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2018 ஒக்தோபர் 10 ஆந் திகதி வரையிலும் அந்த நிர்மாணங்களை பூர்த்தி செய்து படையணிக்கு கையளிக்கப்படாதிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கையளிக்கப்பட்டிருந்த 12 ஒப்பந்தங்களுக்குரிய நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் அதில் 10 ஒப்பந்தங்களுக்கான முற்பணமாக ரூபா 104,899,479 தொகை படையணியால் செலுத்தப்பட்டிருந்தது.

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது 11 செலவின விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான எண்ணிக்கைக்கு இடையே 78 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5.5 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 இன் பிரகாரம் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கை இந்த அறிக்கைத் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வவ்போது படையணியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. கீழே குறிப்பிடப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | முறையான கணக்கீட்டு முறைமையொன்று பயன்படுத்தப்படாமை. |
| (ஆ) பொருட் பதிவேட்டுக் கட்டுப்பாடு | பொருட் பதிவேடு முறையான பிரகாரம் பேணிச் செல்லப்படாமை |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | செலவின விடயத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே முரண்கள் காணப்பட்டமை |

| | | |
|---|---|---|
| (ஈ) | தகவல் முறைமை பேணப்பட்டமை | அறிமுகப்படுத்தப்பட்ட தகவல் முறைமை மூலம் நாளதுவரையாக்கப்பட்ட தகவல்களை இலகுவாகவும், விரைவாகவும் பெறமுடியாமை |
| (உ) | பெறுகைகள் | முறையற்ற பெறுகை கோவைகளைப் பேணுதல் மற்றும் பெறுகைச் செயற்பாடுகள் என்பவற்றில் குறைபாடுகள் காணப்பட்டமை |
| (ஊ) | களஞ்சியக் கட்டுப்பாடு | போதியளவானதும் முறையானதுமான களஞ்சியக் கட்டுப்பாட்டு முறைமை அறிமுகப்படுத்தப்படாமை |